**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன்கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர்31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களைஇலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று

வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை,பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

----------------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல்,

முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள், நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தினால் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் உப பேரேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் பிரதான பேரேட்டில் கட்டுப்பாட்டுக் கணக்கு மாத்திரம் பேணிச் செல்லப்பட்டிருந்தது. மேலும் இந்த போதிய கணக்குகளிலும் போதியவான விபரங்கள் இன்றி மோசடியாக பேணிச்செல்லப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | தற்போது கணக்கீட்டு மென்பொருளொன்று இன்றிபேரேட்டுப் புத்தகங்கள் பேணிச் செல்லப்படுகின்றமையால் ஒவ்வொரு கடன்கொடுத்தோருக்காகவும் தனித்தனியான பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதில்லை. அவ்வாறே பேரேட்டில் சகல தரவுகளையும் உள்ளடக்க முடியாதிருந்தமையினால் வரையறுக்கப்பட்ட தரவு அளவுகள் மாத்திரம் உள்ளடக்கப்படுகின்றது. எனினும் ஒவ்வொரு கடன்பட்டோர் தொடர்பான விபரங்கள் உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டில் உள்ளடக்கப்படுகின்றது. | முறையான பிரகாரம் புத்தகங்கள் / கணனி தரவுகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுய நிதியத்திற்காக பேணிச் செல்லப்படுகின்ற கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இரண்டு சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 418,362 தொகையான வரவு வைத்தல்கள் மற்றும் ரூபா கூட்டுமொத்தமான 7,369,467 ஆன ஐந்து சந்தர்ப்பங்களுக்குரிய செலவு வைத்தல்கள் என்பவற்றின் எந்தவொரு தகவலும் | இந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய தொடர்புகள் கைத்தவறினால் பேரேட்டில் பதியப்படாதிருந்ததுடன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட பின்னர் 2020.01.13 ஆந் திகதி மற்றும் 2020.06.30 ஆந் திகதி கொடுப்பனவு | முறையான பிரகாரம் கணக்கு அறிக்கைகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேரேட்டில் குறிப்பிடப்படாமையினால் அது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | செய்து தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ள இரண்டு கடன்பட்டோரும் இவ்வாறு பேரேட்டில் வரவு வைத்தல் இரண்டு தடவை குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | நாட்குறிப்புக்களை பேரேட்டுக் கணக்குகளில் பதிவதற்கு முன்னர் பொது பேரேட்டில் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தினால் அவ்வாறு பொது பேரேடொன்று பேணிச் செல்லப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது மனுவல் (Manual) முறையில் பேரேட்டுப் புத்தகங்கள் பேணிச் செல்லப்படுகின்றமையால் பொது பேரேடொன்று பேணிச் செல்லப்படாதிருந்த போதிலும் ஒவ்வொரு பேரேட்டிற்காகவும் தனித்தனியான தொடர் இலக்கங்களின் ஒழுங்கு முறையில் நாட்குறிப்பு பதிவுகள் இடப்படுகின்றது. | முறையான பிரகாரம் பிரதான பேரேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழகத்தால் இறக்குமதி பணிகள் தொடர்பான நானாவித கடன்கொடுத்தோர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு கடன்கொடுத்தோருக்காகவும் கடன்கொடுத்தோர் பேரேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த ஒவ்வொரு இறக்குமதி கடன்கொடுத்தோரிடமும் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.இறக்குமதி கடன்கொடுத்தோரின் மீதியைக் காண்பிக்கின்ற பட்டோலையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் கூட்டுமொத்தமாக ரூபா 403,738,540 தொகையான 17 | தற்போது கணக்கீட்டு பொதியொன்று காணப்படாமையினால் மனுவல் (Manual) முறையில் பேரேடுபேணிச் செல்லப்படுகின்றமையால் ஒவ்வொரு இறக்குமதி கடன்கொடுத்தோருக்காகவும் தனித்தனியாக பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதில்லை. எனினும் ஏனைய பேரேட்டில் காண்பிக்கப்படுகின்ற இறக்குமதி கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்காக பட்டோலையொன்று பேணிச் செல்லப்படுகின்றது. அதில் நாணயக் கடிதம் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாணய கடிதத்திற்கான | கடன்கொடுத்தோர் தொடர்பான கோவைகளுக்கு மேலதிகமாக கடன்கொடுத்தோர் பேரேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர்களை குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது. | கோவைகள் கணக்கு பிரிவில் பேணிச் செல்லப்படுவதுடன் இதற்குரிய பிரதான கோவை பல்கலைக்கழக வைத்தியசாலையின் மூலம் பேணிச் செல்லப்படுகின்றது. | |
| (உ) | இறக்குமதி கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கில் கொடுக்கல் வாங்கல்களின் திகதி ஒழுங்குமுறையாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பல்வேறு வெளிநாட்டு நிதியிலிருந்து திறக்கப்பட்ட நாணய கடிதத்திற்காக கொடுப்பனவு செய்தல் அமெரிக்க டொலர் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமையால் இறக்குமதி கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்ட பெறுமதி மற்றும் வங்கிக் கட்டணம் தனியாக காண்பிக்கின்ற வங்கி அறிவித்தல்கள் கிடைப்பதன் தாமதத்தினால் கொடுக்கல் வாங்கல்களின் திகதியை ஒழுங்குமுறையாக பதிவதற்கு முடியாதிருந்தது. | முறையான பிரகாரம் புத்தகங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஊ) | அட்டுறு செலவினங்களை பதிவதற்காக பேரேட்டின் தனித்தனியாக கணக்குகள் பேணிச் செல்லப்படாதிருந்த துடன் பல்கலைக்கழகம் மற்றும் அதனோடு இணைந்த பிரிவுகளின் 92 செலவின விடயங்களுக்குரிய ரூபா 298,768,392 கூட்டுத்தொகையான அட்டுறு செலவினங்கள் அந்தந்த பிரிவுகளுக்கான 06 கட்டுப்பாட்டு கணக்குகளின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அந்தந்த செலவின விடயங்களின் கீழ் காணப்பட்ட அட்டுறு செலவினங்களை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | கணக்கீட்டு பொதியொன்று இன்றி பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்றமையால் அட்டுறு செலவினத்திற்காக பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அதற்கான பட்டோலைகள் பேணிச் செல்லப்படுகின்றது. பேரேட்டில் சரியாக அட்டுறு செலவினங்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் புத்தகங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 116,254,529 தொகையான பதவியணியினரின் கடன்கள் மற்றும் முற்பண மீதிகள் பெறவேண்டியதாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை, ஆண்டின் இறுதியில் நிலுவைக் கடனின் அளவு போன்றவை உள்ளடக்கப்பட்டு முறையான பட்டோலைகளும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் எதிர்காலத்தில் பெறவேண்டியதாக வகைப்படுத்துவதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். இதற்கான கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் ஒவ்வொரு ஊழியரின் பெயரில் பட்டோலைகள் என்பன பேணிச் செல்லப்படுகின்றது. ஊழியர்களின் தனிப்பட்ட சம்பள அறிக்கையிலும் கடன் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | பதவியணி யினருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்கள் தனியாக கணக்கு அறிக்கைகளில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக சுகாதார சேவைகள் திணைக்களத்திலிருந்து வழங்கப்படுகின்ற மருந்துகளின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மருந்துகள் இலவசமாக சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்ற நோயாளிகளுக்கு பணம் செலுத்தி மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வருகை தருகின்ற நோயாளிகளுக்காகவும் விநியோகிக்கப்பட்டிருந்த துடன் எந்த நோயாளர் குழுவிற்காக எந்தஅளவு விநியோகிக்கப்பட்டது என தனித்தனியான தகவல்களை பெறக்கூடிய வகையில் தகவல் முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வழங்கல் தொடர்பாக மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் காணப்படுகின்ற கணனி முறைமை (MSMIS) சில வரையறைகளுடன் வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதனால் உள்ளகக் கட்டுப்பாட்டில் சில குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு தகவல் முகாமைத்துவ கணனி முறைமை (HIMS) கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதுடன் எதிர்வரும் சில மாதங்களில் மருந்து இருப்புக்கள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்திக்கொள்ள முடியும். இலவசமாக மருந்துகள் விநியோகித்தல் மற்றும் பணம் செலுத்தி சிகிச்சை பெறுகின்ற | மருந்துகளுக்கு விலையிட்டு கட்டணங்களை அறவிடுதல் மற்றும் கிரயங்களை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் முறையான கட்டுப்பாட்டு அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நோயாளிகளுக்காக விநியோகிக்கப்படுகின்ற மருந்துகள் தொடர்பாக தனியான அறிக்கை பேணிச் செல்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்தும் செயற்பாட்டிற்காக நிலையான கட்டளையும் விநியோகிக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | பல்கலைக்கழகத்தின் வைத்தியசாலையில் 2020 ஆம் ஆண்டின் மெய்மையாய்வுச் சபை அறிக்கை பரிசோதனையின் போது இரசாயன பொருட்கள், சிகிச்சை இருப்புக்கள் விநியோகிக்கும் போது சரியாக இருப்பில் பதியப்படாமை, இருப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்படாமை, இருப்புக்கள் கணனிமயப்படுத்தப்படாமை போன்ற இருப்பு கட்டுப்பாட்டு குறைபாடுகள் காணப்பட்டன. | பல்கலைக்கழக வைத்தியசாலையில் உத்தேசிக்கப்பட்ட வைத்தியசாலை தகவல் முகாமைத்துவ கணனி முறைமை (HIMS) ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இந்த குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கு முடியும் என அறியத் தருகின்றோம். | இருப்பு கட்டுப்பாட்டை நாளதுவரை யாக்குதல் மற்றும் சரியாக மேற்கொள்வதற்கு தேவையான கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்ப டுதல் வேண்டும். |
| (ஒ) | வைத்தியசாலை மருத்துவ உபகரண இருப்புக்களின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் தொடர்பாக பேரேட்டில் குறிப்பிடப்பட்ட இருப்பு மீதிக்கும் களஞ்சியத்தில் காணப்பட்ட உள்ளபடியான இருப்பு மீதிக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இருப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மருத்துவ உபகரணங்கள் களஞ்சியத்தில் கணனி மயப்படுத்தப்பட்ட பேரேட்டில் இருப்பு மீதி நாளதுவரையாக்கப்பட்டு சரியாக பேணிச் செல்லப்படுகின்றது. எனினும், இருப்பு புத்தகத்தில் சில விநியோகித்தல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. தொற்று நோய் நிலைமையின் காரணமாக பதவியணியினரை அதற்காக ஈடுபடுத்த வேண்டி இருந்தமை இதற்கான காரணமாகும். தற்போது இருப்பு புத்தகங்கள் | இருப்பு புத்தகங்களை நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டியிருந்ததுட ன் உரிய இருப்பு மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்கு தேவையான இணக்கங்கள் செய்யப்படல் வேண்டும். |

நாளதுவரையாக்கப் பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்திலும்,இணைந்த நிறுவனங்களிலும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கிரயமான ரூபா 471,600,374 ஆன சொத்துக்கள் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற போதும் அந்த சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே இந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள், சொத்துக்கள் எதிர்வரும் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு சந்தைப் பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கும், அதற்காக பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கையை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 மற்றும் 07 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப் படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் கணக்குகளின் பிரகாரம் ரூபா 321,919,644 தொகையான 21 ஒதுக்கங்கள் உரிமை மூலதனத்தில் உள்ளடக்கப்பட்ட போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 98(ஆ) பந்தியின் பிரகாரம் அந்த ஒவ்வொரு ஒதுக்கத்தினதும் தன்மை மற்றும் ஒதுக்கம் பேணிச் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் ஒதுக்கங்களுக் குரிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லப்படும் நோக்கங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் எந்தவொரு சொத்தும் நியாயமான பெறுமதியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிடல் முறையில் அதன் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு 1980 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்ட 48 ஏக்கர் நிலம் மற்றும் ஏனைய சொத்துக்கள் கையேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ரூபா 73,653,874 பெறுமதியின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களின் மூலம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களின் நியாயமான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக மீளாய்வாண்டின் போதும், முன்னைய ஆண்டுகளின் போதும் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட கூட்டுப்பெறுமதியான ரூபா 283,815,053 ஆன மருத்துவ உபகரணங்கள், நிலையான சொத்தாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக முற்கொடுப்பனவாக நிதிக் | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றோம். இந்த மருத்துவ உபகரணங்கள் சொத்தாக பதிவு செய்யப்பட்டு பெறுமானத்தேய்வைகண்டறிவதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் நிலையான சொத்துக்கள் மேற்கூறப்பட்ட அளவினாலும் மற்றும் ஆண்டின் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 28,216,753 தொகை குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட திகதி முதல் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்படாமையால் சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட பற்றாக்குறை ரூபா 86,499,999 தொகை வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பல்கலைக்கழக தெற்கு மண்டபம்நடாத்திச் செல்லப்படுகின்ற 56.8 ஹெக்டயர் அளவான காணி 2020 மார்ச் 26 ஆந் திகதி செவனகல பிரதேச செயலகத்தால் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டபோதும் இந்தக் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது சகல சொத்துக்களும் மீள்மதிப்பிடப்பட்டு சந்தைப் பெறுமதியில் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் பல்கலைக் கழகத்துடன் இணைந்த பிரிவில் பதிற்கடமை பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் துணைக் கம்பனியொன்றின் பங்குகளை கொள்வனவு | இந்தக் கொடுப்பனவுகளுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இந்தப் பணம் பல்கலைக்கழக கணக்கிலிருந்து | முறையான பிரகாரம் வருமானச் செலவினம் மற்றும் மூலதன செலவினங்களை வகைப்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காகரூபா 2,000,000 பல்கலைக் கழகத்தால் கம்பனிக்கு செலுத்தப்பட்ட போதிலும் அந்த தொகையில் பங்குகளை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மேற்கூறப்பட்ட பணம் மீளாய்வாண்டின் வருமான செலவினமாக வருமானத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மேற்கூறப்பட்ட அளவினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட கம்பனிக்கு மாற்றுவதற்காக அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்தப் பெறுமதி பல்கலைக்கழகக் கணக்கில் முதலீடாக இனங்காண்பதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | முதலீட்டில் குறித்துரைத்த பிரகாரம் முதலீடாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக வைத்தியசாலையின் பிரதான மருந்து களஞ்சியம் மற்றும் ஏனைய பிரிவுகளில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிக் காணப்பட்ட ரூபா 4,730,553 தொகையான மருத்துவ வழங்கல் இருப்புக்கள் ஆண்டின் செலவினமாக பதிவழிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்தும் நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் குறைந்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மருத்துவ வழங்கல் பிரிவில் இலவசமாக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு 2017 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்ற மருந்துகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அதனால் அந்த இருப்புக்கள் இறுதி இருப்பிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கிடைக்கின்ற மருந்துகளுக்காக கொடுப்பனவு செய்யப்படாதிருந்த போதிலும் அந்த மருந்துகளின் எஞ்சியுள்ள இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதி இருப்பாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் பல்கலைக்கழக வைத்தியசாலையின் பயன்பாட்டிற்காக ரூபா 260,501,370 தொகையான மருந்துகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மருந்துகளுக்காக அந்த திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அந்த செலுத்த வேண்டிய தொகை பொறுப்பாக கணக்கீடு | மருத்துவ வழங்கல் அலகிலிருந்து இலவச சிகிச்சைகளுக்கு விநியோகிப்பதற்காக வைத்தியசாலைக்கு 2017 ஆம் ஆண்டு முதல் இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் அந்த இருப்புக்கள் இறுதி இருப்பிலும் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க | மருந்துகளின் எஞ்சிய இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த மருந்துகளில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிக் காணப்பட்ட ரூபா 50,131,260 தொகையான மருந்து இருப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு கொள்கையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வில்லை. | |
| (ஊ) | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்களை பயன்படுத்தி பல்கலைக்கழகத்தில் பேணிச்செல்லப்படுகின்ற சமூக மண்டபம், பேக்கரி, வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை போன்ற அலகுகளிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 3,129,740 இலாபம் உழைக்கப்பட்ட போதிலும் அது பல்கலைக்கழகத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | இந்த வருமானங்கள் பல்கலைக்கழகத்தின் வருமானமாக இனங்காணப்படாதிருந்த துடன் அந்த அலகுகள் பல்கலைக்கழகத்தின் நலன்புரிக்காக பேணிச் செல்லப்படுகின்றது. எனினும் அந்த வருமானத்தில் 20 சதவீத பகுதியொன்று சுய நிதியத்திற்காக வழங்குவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்திருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் வருமானமொன்றாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான சொத்துக்களில் இருந்து உழைக்கப் படுகின்ற வருமானங்கள் பல்கலைக் கழகத்தின் வருமானமாக கருதப்படல் வேண்டும். கைவிடப்படுகின்ற வருமானங்கள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பல்கலைக்கழக தொட்டுணரக்கூடிய சொத்துக்கள் | 3,045,470,437 | 2,968,855,743 | 76,613,694 | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கணக்கு மீதிகளை இணக்கம் செய்வதற்கும்,வேறுபாடுகள் காணப்படுமாயின் அதற்குரிய காரணங்களை இனங்கண்டு சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுய நிதியம் தொட்டுணரக்கூடிய சொத்துக்கள் | 1,886,514,364 | 8,877,634,085 | 8,880,278 | | |
| (இ) | தெற்கு மண்டப தொட்டுணரக்கூடிய சொத்துக்கள் | 1,093,666,552 | 1,080,532,089 | 2,209,359 | | |
| (ஈ) | பல்கலைக்கழக வைத்தியசாலை தொட்டுணரக்கூடிய சொத்துக்கள் | 35,717,607,135 | 35,717,809,711 | 202,576 | | |

### 1.5.5 அதிகாரப்பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரப்பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளும் போது இதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் அங்கீகாரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் பட்டப்பின் படிப்பு கற்கை பிரிவில் ரூபா 402,500 கூட்டுத்தொகையான அவ்வாறான சீராக்கங்களுக்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | தவறினால் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் கையொப்பமிடப்படாதிருந்த துடன் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான அங்கீகாரத்துடன் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் மேற்கொண்டு கணக்குகள் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.6 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தால் 2014 ஆம் ஆண்டின் போது துணைக் கம்பனியொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்துடன் அந்தக் கம்பனியில் ரூபா 100 சாதாரண | கணக்காய்வு ஐய வினாவுடன் இணங்குகின்றோம். பல்கலைக்கழகத்தின் கீழ் 100 சதவீத உரித்தை | கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை |

| | | |
|---|---|---|
| பங்குகள் 100 இன் மொத்த உரித்தும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக காணப்பட்டது. எனினும், அந்த முதலீடு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த துணைக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களை பல்கலைக்கழக நிதிக் கூற்றுக்களுடன் இணைத்து கொள்வதற்கோ அல்லது அவ்வாறு இணைத்துக் கொள்வதில் தொழில்நுட்ப பிரச்சினைகள் காணப்படுமாயின் அது தொடர்பாகவோ நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொண்டுள்ள துணைக் கம்பனி தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6. பெறவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்கொடுப்பனவு செய்யப்பட்ட மற்றும் பெற வேண்டிய பெறுமதிகளின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ரூபா 11,997,844 தொகையான (Amount Recivable on ration account) பெறுமதியை அறவிடுவதற்காக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் இந்தப் பெறுமதி யாரிடமிருந்து பெறவேண்டியது என குறிப்பாக இனங்காண்பதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை கடற்படை மற்றும் விமானப் படைக்கு பங்கீட்டு அட்டைப் பணம் தாமதமடைந்தமை இந்த பெறவேண்டிய பெறுமதிக்கு காரணமாக இருந்தது. இப்பெறுமதி குறித்த வகையில் இனங்காணக் கூடிய பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவில் பதிவேடுகள் பேணிச் செல்லப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

| | சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 23 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவது துணை/சார்ந்த அல்லது ஏனைய நிறுவனமொன்றில் நிதியை முதலீடு செய்தல் நிதியமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான இணக்கப்பாடுகள் இன்றி பல்கலைக் கழகத்தின் துணை கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்வதற்காக ரூபா 2,000,000 வழங்கப்பட்டிருந்தது. | இதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இந்தப் பணம் பல்கலைக்கழகக் கணக்கிலிருந்து மேற்கூறப்பட்ட கம்பனிக்கு மாற்றுவதற்காக அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. | முதலீடு தொடர்பாக திறைசேரி அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது பாராளு மன்றத்தின் முதலாவது அமர்வில் 2018 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளை | மாணவர்களை சேர்த்தல் மற்றும் நிர்வாக சபைத் தீர்மானத்தின் செல்லுபடியான தன்மை போன்ற விடயங்களை மேவுகை செய்யும் வகையில் பல்கலைக்கழகத்திற்கு ஒத்திசைவாக ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தை திருத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த | தற்போது காணப்படுகின்ற சட்டத்திலுள்ள நோக்கங்களை விரிவுபடுத்துதல்மற்றும் புதிய பட்ட பாடநெறிகளை ஏற்படுத்துதல் காலரீதியில் தேவை ஏற்பட்டிருந்தமையினால் அதற்காக பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. புதிய | பொது முயற்சிகள் குழுவின் அறிவுரையை விரைவாக அமுல்படுத்துவதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் மீளாய்வாண்டின் போதும் சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான ஏற்பாடுகளை வழங்குவதற்காக புதிய சட்ட வரைவொன்று பல்கலைக்கழக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் என்பன கிடைத்திருந்ததுடன் வரைபு 2016.12.06 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2020.12.14 ஆந் திகதி இந்த சட்டத்தின் வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்போது பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன சட்டம் மற்றும் 1988 இன் 27 ஆம் இலக்கம் மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க திருத்த சட்டங்கள் | முன்னர் காணப்பட்ட சட்டத்தில் காண்பிக்கப்படுகின்ற பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்கும் நோக்கத்தின் பிரகாரம் கடெட் உத்தியோகத்தர்கள்,உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக அரச பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமைத்துவத்திற்காக உரித்தான கற்கை பிரிவினால் கற்கை பாட நெறிகளை நடாத்துதல் மற்றும் ஆலோசனை வழங்குவதாக இருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் கடட் உத்தியோகத்தர்கள் | புதிய திருத்தப்பட்ட சட்டத்தின் வரைவு 2020.12.14 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்போது பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இந்த பணிகளுக்காக தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லலது அரசாங்க உத்தியோகத்தர் அல்லாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு பணம் செலுத்தும் அடிப்படையில் பட்டம் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019/2020 இன் கல்வியாண்டிற்காக அவ்வாறான 786 மாணவர்களுக்காக 21 பட்டப் பாடநெறிகள் அமுல்படுத்தப்படுகின்றது. | | |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 சேமிப்புக் கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 3,065,576,646 தொகையான வைப்பு மீதி பேணிச்செல்லப்பட்டிருந்ததுடன் இந்தப் பணத்தை ஒப்பீட்டுரீதியில் உயர் வட்டி வீதத்தின் கீழ் வேறு பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள கூட்டுமொத்தமான ரூபா 3,065,576,646 வைப்பு மீதியில் அதிக பெறுமதியான ரூபா 2,758,077,817 தொகையைக் காண்பிப்பிப்பது இலங்கை வங்கியில் பேணிச்செல்லப்படுகின்ற அமெரிக்க டொலர் கணக்காகும். பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் பணத்தின் மீதி பிரதானமாக இதில் காண்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கிடைத்த கடன் தொகையில் அமெரிக்க டொலர் 20 மில்லியன் மிகை நிதிதற்போது | ஆக்கபூர்வமானதாக நிதியத்தை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய மீதி மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நாணய கடிதத்திற்காக செலுத்துவதற்கு சேமிப்பு கணக்கில் பேணிச் செல்லப்படுகின்றது. ரூபா 292,395,318 ஆக காண்பிக்கப்படுகின்ற மக்கள் வங்கியின் 080200110020111 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் உயர்ந்த வட்டி வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பணச் சந்தை கணக்காக (Money Market Account) ஆக பேணிச் செல்லப்படுவதுடன் அந்தக் கணக்கின் மீதியும் பல்கலைக்கழகத்திற்கு தேவையான மூலதன மற்றும் வருமான செலவினங்களை செய்வதற்காக காணப்படுகின்ற நிதியாகும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழகம் மற்றும் அதற்கு இணைந்த நிறுவனங்களினால் பேணிச் செல்லப்பட்ட 08 நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டில் பேணிச் செல்லப்பட்டிருந்த சராசரியான மாதாந்த மிகை பணத்தின் மீதி ரூபா 118 மில்லியனுக்கும் ரூபா 534 மில்லியனுக்கும் இடையிலான அளவினைக் கொண்டிருந்தது. எனினும். இந்த மிகைப் பணத்தை மதிப்பீடு செய்து மேற்கூறப்பட்ட அதிசிறந்த முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை | 2020 ஆம் ஆண்டின் போது இரண்டு வங்கிக் கணக்குகளின் நிதியங்களில் இருந்து குறுங்கால முதலீடுகளில் (REPO) முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மார்ச் மாதத்தின் பின்னர் ஒக்தோபர் வரை போதியளவான மிகை மீதியொன்று காணப்படவில்லை. நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மூலதன செயற்திட்டங்களுக்காக செலுத்துவதற்காக நிதியம் | ஆக்கபூர்வ மானதாக நிதியத்தை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் குறுங்கால நிதியங்களில் முதலீடு செய்வவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 4.85 மில்லியன் ஆகும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 508,518,953 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 413,067,394 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 95,451,559 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பதவியணியினர் கொடுப்பனவுகள், வழங்கல் மற்றும் சேவைச் செலவினங்கள், பராமரிப்புச் செலவினம் மற்றும் கடன் வட்டி போன்ற செலவினத் தொகுதிகளின் அதிகரிப்பு பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

(அ) 2019 ஆம்ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த வருமானத்தில் 10.3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இந்த அதிகரிப்பிற்காக திறைசேரி மானியங்கள் ரூபா 641.63 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் வைத்தியசாலை வருமானம் ரூபா 123.9 மில்லியனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் மொத்த செலவினம் ரூபா 9,427.42 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்த செலவினம் 10.96 சதவீதத்தினால் 931.05 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக நிதி செலவினங்கள், ஆளணி சம்பளங்கள்,வழங்கல்மற்றும் சேவைகள் போன்ற செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதான காரணங்களாக இருந்தன.

(இ) மேலும் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த செலவினத்தில் 52 சதவீதம் அதாவது ரூபா 4,926 மில்லியன் கடன் கிரயத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது பல்கலைக்கழகத்தின் மொத்த வருமானத்தில் 55 சதவீதமாக இருந்தது. இந்த கடன் கிரயம் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திறைசேரி முறியின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெறப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் 201.629 மில்லியன் கடன் தொகை காரணமாக இருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

(அ) 2019 ஆம் ஆண்டின் போது 4.47 மறைப் பெறுமதியாக காணப்பட்ட உரிமை மூலதனத்தின் அடிப்படையிலான நலன் விகிதம் மீளாய்வாண்டின் போது மறை 5.86 வரை மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) 2019 ஆம் ஆண்டின் போது 2.40:1 ஆக காணப்பட்ட நடைமுறை சொத்துக்களின் நடைமுறைப் பொறுப்பு விகிதம் மீளாய்வாண்டின் போது 1.52:1 வரை குறைவடைந்து காணப்பட்டது.

(இ) 2019 ஆம் ஆண்டின் போது உரிமை மூலதனத்தின் அடிப்படையில் கடன் மூலதன விகிதம் 3.83:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த அதிகரிப்பு நிலை 4.47:1 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வேரஹெரயில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 48 ஏக்கர் 02 றூட் 16.2 பேர்ச் அளவான காணியில் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலை மற்றும் இலங்கை இராணுவத்தின் றெஜிமன்ட் நிலையத்தின் மருத்துவ படையணிஸ்தாபிக்கப்பட்டிருந்த துடன் அந்தக் காணியை பாதுகாப்பு அமைச்சிற்கு கைப்பற்றுவதற்காக ரூபா 5,054,000,000 மேலதிக நிதியேற்பாட்டை வழங்குவதற்கு 2017 ஏப்ரல் 25 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் உரிய காணியை கைப்பற்றும் மிகுதி பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதி | இந்தக் காணியை கையேற்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழகத்தினால் உரிய தகவல்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. | அமைச்சின் மூலம் காணியைக் கையேற்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்ட காணியின் உரித்து பல்கலைக்கழகத்துக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் காணியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இந்தக் காணியின் சட்ட ரீதியான உரித்து பல்கலைக் கழகத்துக்கு கையளிக்கப் படாதிருந்த போதும் ஆண்டின் இறுதியளவில் அதில் நிர்மாணிக்கப்பட்ட போதனா வைத்தியசாலைக்குரிய கட்டிடங்களின் பெறுமதி ரூபா 31.1 பில்லியன் ஆகும். மேலும் வைத்தியசாலையை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக காணியை அபிவிருத்தி செய்வதற்குரூபா 1,217 மில்லியன் கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. | கட்டிடம் மற்றும் காணியை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட கிரயம் அவற்றின் சட்ட ரீதியான வடிவத்தின் பிரகாரம் அல்லாமல் அவற்றின் சரியான பொருளாதார தன்மையின் பிரகாரம் சொத்தாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உரித்தை தீர்த்து வைத்தல் முகாமைத்துவத் தின் பொறுப்பாக இருந்தமையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக போதனா வைத்தியசாலை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திறைசேரி முறியின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் போது தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து ரூபா 3,165.32 மில்லியன் கடன் பணமும்,ஐக்கிய அமெரிக்க டொலர் 177.33 மில்லியன் கடன் பணமும் பெறப்பட்டிருந்தது. இந்த ஐக்கிய அமெரிக்க டொலர் கடன் பணத்தின் இறுதி தவணை 2017 சனவரி 10 ஆந் திகதி பெறப்பட்டிருந்ததுடன் அதில் ஐக்கிய அமெரிக்க டொலர் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையான கடன் முகாமைத்துவ முறைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் பெறல் கிரயங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 26,229,756 மீளாய்வாண்டு வரையில் குறித்துரைக்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப் படாதிருந்ததுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் 20,911,260 (ரூபா 3,903.08 மில்லியன்) 03 நிலையான வைப்புக்களிலும், ஐக்கிய அமெரிக்க டொலர் 6,229,586 (ரூபா 1,162.75 மில்லியன்) சேமிப்பு வைப்பு கணக்கிலும் 01.02 சதவீதம் முதல் 5.5 சதவீதம் வரையான வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இந்தக் கடன் பணத்தில் தவணை வட்டி செலுத்துவதற்காக வருடாந்தம் 15 சதவீதம் மற்றும் 8.5 சதவீதப் படி திறைசேரி நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கும் போது ஐக்கிய அமெரிக்க டொலர் 26.22 மில்லியன் தொகை குறித்துரைத்த பணிகளுக்காக பயன்படுத்தப்படாமையால் வருடாந்தம் ஐக்கிய அமெரிக்க டொலர் 2.23 மில்லியனுக்கு (ரூபா 410.498 மில்லியன்) அண்ணளவான மிகை வட்டித் தொகையொன்றை திறைசேரிக்கு செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உபகரணங்களை கொள்வனவு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களின் பிரகாரம் இந்தக் கடன் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து செலுத்துகின்ற மேலதிக வட்டியை குறைப்பதற்கு முடியுமாக இருக்கும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையான கடன் முகாமைத்துவ முறைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் பெறல் கிரயங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2017 திசெம்பர் மாதத்தின் போது செயற்பாட்டு நடவடிக்கைகள் | மீளாய்வாண்டில் நோயாளர்கள் உள்ளடக்கப்படுதல் | முதலீடு செய்யப்பட்ட அரச நிதியத்திற்காக |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகத்தில் 496 கட்டில்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் 16,255 நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றிருந்தனர். அதன் பிரகாரம் வைத்தியசாலையின் கட்டில்களின் சுழற்சி வீதம் (Bed Turnover Rate) 45.12 சதவீதமாக காணப்பட்டமையால் வைத்தியசாலையின் கட்டில்களின் உபயோகம் பயன்பாட்டுரீதியில் (Productivity of Hospital Beds) குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | குறைந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கு தொற்றுநோய் நிலைமை மற்றும் ஊரடங்கு சட்டங்கள் அமுல்படுத்தப் பட்டிருந்தமை காரணமாக இருந்தது. நோயாளிகள் வைத்தியசாலைக்கு வருகை தரல் மற்றும் அனுமதித்தல் அத்தியாவசிய சிகிச்சைகளுக்காக மாத்திரம் வரையறுக்கப் பட்டிருந்து. மேலும் அவசர விபத்து பிரிவு வைத்தியசாலை செயற்படாமையினால் நோயாளர்களை அனுமதித்தல் குறைவாக இருந்தமைக்கு தாக்கமளித்திருந்தது. | போதியளவான நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மேலும் 2017 திசெம்பர் மாதத்தின் போது வைத்தியசாலை செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அவசர விபத்து பிரிவை உள்ளடக்கிய மூன்று பிரிவுகள் மற்றும் மூன்று வாட்டுக்கள் போதியளவான மருத்துவ மற்றும் ஏனைய பதவியணியினர்கள் காணப்படாமையின் காரணமாக 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி வரை குறித்துரைக்கப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. எனினும் அவசர விபத்து பிரிவு மற்றும் இரண்டு வாட்டுக்கள் மாத்திரம் 2020 ஏப்ரல் மாதம் முதல் கொரோனா வைரஸ்தொற்று நோயாளர்களின் சிகிச்சைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | இந்தப் பிரிவினை அமுல்படுத்துவதற்காக போதியளவான மருத்துவ பதவியணியினர்களை பேணிச்செல்ல வேண்டியிருந்ததுடன் அதற்கு சமனான வாட்டுக்கள் மற்றும் சத்திரசிகிச்சை பதவியணியினரையும் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. சுகாதார அமைச்சிலிருந்து பதவியணியினரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த பிரிவுகளில் செயற்படுத்தப்படுகின்ற COVID தொற்று நோயாளர்களின் அவசர சேவைகள் ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்லப்படுகின்றது. | முதலீடு செய்யப்பட்ட அரசாங்க நிதியத்திற்காக போதியளவான நலன்களை காலரீதியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,058,138 பெறுமதியான 07 வகையான மருத்துவ உபகரணங்களுக்குரிய 277 அலகுகள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் பயனற்று காணப்பட்டது. | இதனை எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட பிரிவுகள் மற்றும் தற்போது காணப்படுகின்ற பிரிவுகளின் தேவைகளுக்காக விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமான தாக பயன்பாட்டிற்கு உட்படுத்துதல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்** | | |
| | கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 903 பதவியணியினர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட உள்ளபடியான பதவியணியினர் 767 ஆகும். அதன் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு 153 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | கல்விசார் பதவியணியினரின் வெற்றிடங்களுக்கு இடையே அநேகமானவை பேராசிரியர் பதவிகளாக இருந்ததுடன் அதற்காக தகைமை பெற்ற நபர்களின் பற்றாக்குறை காணப்பட்டது. வெற்றிடங்களுக்காக வருடாவருடம் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட போதிலும் தகைமையுடன் விண்ணப்பங்கள் கிடைப்பதில் பற்றாக்குறை காணப்பட்டது. தற்போது பேராசிரியர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் இரண்டு பேரும், வேலை கையளித்தல் அடிப்படையில் 11 பேர்களும் கல்விசார் நடவடிக்கைகளின் தரத்தை பேணிச் செல்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிறிய தரங்கள் தவிர ஏனைய பதவியணியினர்களை ஆட்சேர்ப்பதற்காக | போதியளவான பதவியணியினர் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | பல்கலைக்கழக பதவியணியினர்களுக்கு மேலதிகமாக முப்படை பதவியணியினராக 103 உத்தியோகத்தர்கள் மற்றும் 864 ஏனைய தரத்திலுள்ளவர்களை உள்ளடக்கிய பதவியணியினர் ஒன்று முழு நேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பதவியணியினரின் ஊதியங்கள் முப்படை செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. இந்த பதவியணியினருக்குரிய 92 உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய 584 படையினர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்ட போதும் அந்த அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் அதற்கு மேலதிகமாக 11 உத்தியோகத்தர்கள் மற்றும் 280 ஏனைய படையினர்களும் தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | பல்கலைக்கழகத்தின் ஆலோசனை, நிர்மாண, பாதுகாப்பு கடமைகளுக்காக 11 உத்தியோகத்தர்களும், 280 ஏனைய தரத்திலுள்ளவர்களும் தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களின் கடமை நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் விடுவிக்கப்படுகின்றனர். பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உள்ளக றெஜிமன்ட் சேவை (ERE) அடிப்படையில் இந்த விடுவிப்புச் செய்யப்படுகின்றமையால் அவர்களின் ஊதியங்கள் உரிய இராணுவத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் போது பல்கலைக்கழகத்திற்கு நியமிக்கப்பட்ட முப்படை பதவியணியினரை மீளமைப்புச் செய்து அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்பட்ட போதும் அது தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்படாதிருந்த மையும் அவதானிக்கப்பட்டது. | இந்த பல்கலைக்கழகத்திற்கு ஒத்திசைவான வகையில் புதிய முப்படை பதவி ஆவணமொன்றை தயாரிக்கும் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் குழுவின் ஆலோசனையை விரைவாக அமுல் படுத்துவதற்கு தேவையான மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஈ) தெற்கு மண்டபம்

| | | |
|---|---|---|
| கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்ட தெற்கு மண்டபத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 527 ஆக இருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட உள்ளபடியான பதவியணியினர் 186 ஆக இருந்தமையால் 341 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | கல்விசார் பதவியணியின் தேவைகளை தவிர கல்விசாரா பதவியணியினரின் தேவையும் தற்போது தெற்கு மண்டபத்தின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவ குழுக்களின் தேவையின் பிரகாரம் இந்த மண்டபத்தில் திணைக்களங்களில் கடமையின் தேவையின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்ற கோரிக்கையின் பிரகாரம் பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிப்பதன் ஊடாக ஆட்சேர்த்து கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | போதியளவான பதவியணியினர் பேணிச் செல்லப்படுதல் வேண்டும். |